DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
அமர்வு வழக்கு எண்.138/2013

Deposition of :PW -8

| | | |
|---|---|---|
| Name | : திரு.செல்வம் | Caste: |
| Father's Name: | திரு. துரைசாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 4th day of January -2024.

**A1 , A2, A5 to A9, A11, A13 to A18 present. A3 produced.**

**Date: 04.01.2024**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் வங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். வாட்மேனாக தற்போது பணிபுரிகிறேன். இதற்கு முன்பாக கூலி வேலை செய்து வந்தேன். இவ்வழக்கு கொலைசெய்யப்பட்ட 5 நபர்களையும் எனக்கு தெரியும். அவர்கள் எனது உடன் பங்காளிகள். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகளும் எனது உறவினர்கள் தான். சிலர் எனது பங்காளிகள். மற்றவர்கள் எனக்கு மாமன், மச்சினன் உறவு முறை வேண்டும்.

16.05.2008 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் நான் தண்ணீர் பிடிப்பதற்காக தேவகுமாரி வீட்டிற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள பொது குழாயிக்கு சென்றேன். அங்கு சரோஜா, நடராஜன், கோபி, எனது மனைவி மல்லிகா ஆகியோர் தண்ணீர் பிடித்துகொ்ண்டிருந்தோம். அப்போது எதிரிகள் தினேஷ், ராஜதுரை ஆகியோர் தங்களது கைகளில் கத்திகளுடன் வந்தார்கள். அப்போது காமராஜ்

வீட்டிற்கும், வேலாயுதம் வீட்டிற்கும் இடைப்பபட்ட சந்தில் காசிநாதன் மகன் மகாலிங்கம் நின்றுகொண்டிருந்தார்.

மகாலிங்கத்தை பார்த்த எதிரிகள் தினேஷ் மற்றும் ராஜதுரை ஆகிய இருவரும் உன்னைதாண்டா தேடிகொண்டிருக்கிறோம் என்று சொல்லி மகாலிங்கத்தின் கழுத்து, தலை ஆகிய இடங்களில் மாறிமாறி வெட்டினார்கள். நாங்கள் தடுத்துபார்த்தோம் எதிரிகள் எங்களை பார்த்து நீங்கள் கிட்டே வந்தால் உங்களையும் வெட்டுவோம் என்று சொன்னார்கள்.

மகாலிங்கத்தின் உயிர் பிரிந்ததிற்கு பிறகு எதிரிகள் இருவரும் அங்கிருந்து போய்விட்டார்கள். எனது வீட்டருகே நான் சென்று பார்த்தபோது காசிநாதன், அவரது மனைவி ஜானகி, மகன் தர்மலிங்கம் ஆகியோர் வெட்டுபட்டு கிடந்தார்கள். ஜானகி மட்டும் உயிர்பிழைத்துவிட்டார். மற்ற இருவரும் இறந்துவிட்டார்கள். தர்மலிங்கத்தின் உடலில் தலை இல்லை. தலையை எடுத்துகொண்டுபோய் அருகிலிருந்த காளியம்மன் கோவில் சூலத்தில் குத்தி வைத்திருந்தார்கள்.

இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் வைத்திருந்த ஆயுதங்கள் என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் வீச்சருவாள் மற்றும் பட்டாகத்தி போன்ற ஆயுதங்களை தான் எதிரிகள் வைத்திருந்தார்கள். அதாவது ஒருவர் வீச்சருவள் போன்ற ஆயுதத்தையும், ஒருவர் பட்டாகத்தி போன்ற ஆயுதத்தையும் வைத்திருந்தார்.

**<u>8– ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

8 ஆம் எதிரி பாஸ்கரனுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**<u>13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்தபோது நான் முதன்மை சாட்சியத்தில் என்ன சங்கதிகளை சொல்லியிருக்கிறோனோ அதே சங்கதிகளைதான் சொல்லியிருக்கிறேன். போலிசார் விசாரணையில் நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எதிரிகள் தங்கள் கைகளில் குறிப்பாக என்னென்ன ஆயுதங்களை

வைத்திருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன். சம்பவ இடத்திற்கும் நான் தண்ணீர் பிடித்துகொண்டிருந்த இடத்திற்கும் இடையே சுமார் 10 அடி தொலைவு தான் இருக்கும். மகாலிங்கத்தை வெட்டிய இடமானது கிழமேல் வீதி என்றால் சரிதான். மகாலிங்கத்தை சந்திற்குள் வைத்து வெட்டினார்களா அல்லது வீதியில் வைத்து வெட்டினார்களா என்றால் வீதியும் சந்துபகுதியும் சேரும்இடத்தில் வைத்து வெட்டினார்கள்.

சம்பவ சமயத்தில் நான் விவசாய வேலை தான் செய்தேன். பொதுவாக நான் காலை 6.00 மணிக்கு வயலுக்கு சென்று தண்ணீர்பார்த்துவிட்டு சுமார் 1 மணிநேரத்தில் வீட்டிற்கு திரும்பி விடுவேன். நான் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தபோது என்னுடன் மல்லிகா, சரோஜா, நடராஜன், கோபி ஆகியோர் நின்றுகொ்ண்டிருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். சரோஜா, நடராஜன் ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

நான் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், இறந்துபோனவர்கள் எனது உறவுகாரர்கள் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. சாட்சி நான் பார்த்ததை தான் சொல்லுகிறேன் என்று மிகவும் ஆக்ரோசமாக கூறுகிறார்.

**3 மற்றும் 6–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர் திரு.நாராயணன் இன்று வக்காலத்து தாக்கல் செய்து ஆஜர்.அவர் குறுக்குவிசாரணைக்கு தயாராக இல்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.